உமையம்மை



கழக வெளியீடு: ௭௨0

மலர் வழிபாட்டு வரிசை - ௬

உமையம்மை வழிபாடு

(௧0௮ போற்றி)

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

முதற் பதிப்பு: செப்டம்பர், 1954
இரண்டாம் பதிப்பு: திசம்பர், 1954

பதிப்புரை

இறைவன் எங்கும் நிறைந்த இன்பப்பொருள். அவன் எல்லா உயிர்களிடத்தும் பேரிரக்கப் பெரியான். அவ் இரக்கமே அருள் என்பது. அருள் தாய்மைப் பண்பு; அப் பண்பு வடிவே உமையம்மை. இறைவன் அருளையே பெண்மை உருவாக, தாய்மைத் தன்மையாகக் கொண்டு பண்டைக் காலந்தொட்டே வழிபட்டு வரலாயினர்.

இத் தாய்மையே உமையம்மையின் திருவுரு. இவ் வம்மையின் அருள்பெற எண்ணி அவள்தன் ஆற்றலை வியந்து அகங்கரைந்து அன்புடன் குழைந்து வழிபாடாற்று வது, மக்கட்குச் சிறந்த மாண்பாகும்.

அம்மையின் மலரடிகட்கு, மலர்களைக்கொண்டே அம்மையின் திருப்பெயரையும் திருவிளையாடல்களையும் சொல்லி எத்தி கoஅ, கooஅ என்னும் எண்ணிக்கைகொண்டு நம் தாய்மொழியிலேயே கூறிக் குறையிரந்து வணங்குதல் நன்மையாகும்.

இக் குறிக்கோளை முதன்மையாகக்கொண்டு, மலர் வழிபாட்டு வரிசை க, உ, ௩ தலைப்பில், '**பிள்ளையார் வழி பாடு**', '**முருகப்பெருமான் வழிபாடு**' '**சிவபெருமான் வழிபாடு**' என்னும் மூன்று நூல்களையும் பல நூல்களிலுள்ள புகழ்ப் பாக்களின் தொகுப்புடன் அண்மையில் அடுத்தடுத்து வெளி யிட்டுள்ளோம். இது, அவ்வரிசையில் ச-ஆவதாக '**உமை யம்மை வழிபாடு**' என்னும் பெயரால் வெளிவருகின்றது.

இதைச் செப்பனிட்டுதவிய தணிகைமணி, இராவ் பகதூர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ., அவர் கட்கு எமது உளங்குளிர்ந்த நன்றி.

தமிழ்மக்கள் இதனையும், இதற்கு அடுத்து வெளிவரும் மற்ற வழிபாட்டு வரிசை நூல்களையும் வாங்கிக் கற்று இறைவன் திருக்கோவில்களிலும் தத்தம் இல்லங்களிலும் வழிபாடு ஆற்றி, இறைவியின் திருவருள்பெற்றின்புற வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அப்பர் அச்சகம், சென்னை 1.—II-E. C. 10200.

உமையம்மை வழிபாடு

க. நூற்றெட்டுப் போற்றி

*வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

[நிலைமண்டில ஆசிரியப்பா]

திருநிலை நாயகி தேவி போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி
இளமை நாயகி எந்தாய் போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப் போல்மொழி யாயே போற்றி
பேழை வயிற்றனைப் பெற்றாய் போற்றி
பால்வளை நாயகி பார்ப்பதி போற்றி
சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் போற்றி
அறம்வளர் நாயகி அம்மே போற்றி

"எல்லாம் வல்ல உமையம்மையே!

**...............................ஊர்,...............................மகன் ....பொருட்டு, இந்த நல்ல நாளில் செய்யப்பெறும் மலர்வழிபாட்டை ஏற்றருளி, அவர்கட்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும் நின் திருவடி அன்பும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், மக்கட்பேறும், மற்றும் பிற நலங்களும் நாளும் பெருகி நீடூழி வாழ அருள்புரிவாயாக," என்று ஓதி மலர்வழிபாடு செய்க.*

மறங்[1]கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாப் பராபரை போற்றி
கரு. உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி
மலர்தல் குவிதலில் மணமலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
உ௦. மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி
சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப்[2] பொருள்களிற் பொருந்தினாய் போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலி[3]சூ ழாவகை காப்பாய் போற்றி
உரு. வண்டுவார் குழலி மாதா போற்றி
செண்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கமுகுக் கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி
ந௦. முருந்[4]தேர் முறுவல் முதல்வி போற்றி
வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன் தரும் நங்காய் போற்றி
மின்னொளி யம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
நரு. பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி
இச்சைக் கிசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர் கொம்பே போற்றி
தவள[5]வெண் ணீற்றோன் தலைவி போற்றி

---

1. மறம் - தீயசெயல். 2. புவனம் - உலகம்.
3. கலி - வறுமை. 4. முருந்து - மயில் இறகின் அடிக்குருத்து.
5. தவளம் - வெண்மை.

பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தூயோய் போற்றி
குயில்மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில்மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வையமீன் றளிக்கும்[1] வளத்தாய் போற்றி
மெய்யுரு கடியர்[2] விருப்பே போற்றி
ஆவுடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர்[3] அருந்தா அமிழ்தே போற்றி
பனங்காட் டூருறை பவளே போற்றி
அனங்காட் டும்நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்ந்தோய் போற்றி
குமிழ்[4]தா மரைமலர் கொடியிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி
மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி
கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கூடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரி[5]ல் காட்சிச் சேயிழை போற்றி

---

1. வையம் ஈன்று அளிக்கும். 2. மெய்யுருகு அடியர்.
3. அண்டர்-தேவர். 4. குமிழ்-குமிழம்பூ. 5. செயிர்-குற்றம்.

சேந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
௭௦. ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல்[1] நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி
௭௫. பெண்ஆண் அலி[2]யுருப் பெற்றோய் போற்றி
ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி
௮௦. பச்சிளம் பெண்ணுய்ப் பகர்வோய் போற்றி
எச்சம யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணு யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனுய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி
௮௫. மருளினர் காணு வான்பொருள் போற்றி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழை[3]யாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
௯௦. திருநணு மங்கைச் செல்வி போற்றி
உருவும் திருவும் உடையாய் போற்றி
பெருந்துறை அரசிப் பெண்கனி போற்றி

---

1. *கொண்டல் - மேகம்.* 2. *அலி - ஆண் பெண் அல்லாத பேடு.* 3. *குழை - காதணி.*

அருந்துறைத் தமிழின் அமைபொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி
சூளா மணி[1]யே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
போற்றிதா யுமையே போற்றி போற்றியே.

திருச்சிற்றம்பலம்

1. சூளாமணி - சூலாமணி - துளைக்கமுடியாத முத்து; மாணிக்கம். சூலல் - துளைத்தல். ல, ள போலி.

உ. புகழ்ப்பாக்கள்

ஒன்ருகி ஐந்தொழிற்கும் ஐந்துவிதம் உற்றுயிருள்
நின்ருள்பொற் பாதநினை வாம். (க)

—சைவசமயநெறி.

பெற்ருளைச் சிற்றுயிரைப் பேருயிருள் நீங்காளைப்
பொற்ருளிற் சூட்டுவெம்நாட் போது. (உ)

—இறைவன் நூற்பயன்.

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம். (ங)

—பதிபசுபாச விளக்கம்.

ஈசனருள் இச்சையறி வியற்றல் இன்பம் இலயமொடு
போகமதி காரம் ஆகித்
தேசருவம் அருவுருவம் உருவம் ஆகித் தேவியுமாய்த்
தேசமொடு செல்வம் ஆகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போகம்
அவையளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசகலும் அடியருளத் தப்பனுடன் இருக்கும் அன்னையருட்
பாதமலர் சென்னி வைப்பாம். (ச)

—சிவஞானசித்தியார்.

உருகிஉருகி நெக்குநெக்குள் உடைந்து
கசிந்திட் டசும்பூறும்
உழுவல் அன்பிற் பழவடியார் உள்ளத்
தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமா னந்தவெள்ளப் பெருக்கே
சிறியேம் பெற்றபெரும்
பேறேஊறு நறைக்கூந்தல் பிடியே
கொடிநுண் நுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்தும் மலர்ப்பூங்
கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை மழலை
அரும்பச் சேதாம்பல்

முருகு விரியும் செங்கனிவாய் முத்தம்
தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய்
முத்தம் தருகவே. (௬)

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற் பிடியே
வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான்
முக்கட் சுடர்க்கிடு நல்
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே
வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே
வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த கொம்பே
வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார்
பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை மழலைக்
கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே
வருக வருகவே. (௬)

—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

அயில்கண் தனையஞ் சலித்தேத்தும் அன்னை
வருக பெருங்கருணை
ஆழி வருக தீவினையேம் ஆவித்
துணையே வருகவிடம்
துயில்கண் டனையம் பலத்தாட்டும் சுடர்பொற்
கொடியே வருகஇளஞ்
சுகமே வருக நறுங்குதலை தோற்றுங்
கிளவி எனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும் பசுங்கோ
கிலமே வருகஎன்றும்
பருகத் தெவிட்டாச் சுவையமுதப் பாவாய்
வருக பசுந்தோகை
மயில்கண் டனைய இளஞ்சாயல் மாதே
வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி
வருக வருகவே. (எ)

—அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

செந்தா மரைமெல் இதழ்மருட்டித் தேமா
நறுந்தண் தளிர்வருத்திச்
செயலை மலர்நல் நலங்கவற்றிச் செம்பஞ்
சினையும் விளரியற்றி
அந்தார் புனையும் உழுவலன்பர்க் கழியா
இன்பம் அளித்தும்மண
அம்மி இடத்தும் பயின்றதனல் அடியேன்
மனத்திற் குடியிருந்த
பைந்தாள் பெயர்த்து மேகலையும் பாத
சாலங் களும்ஒலிப்பப்
பவளவாய்ப்புன் னகையரும்பப் பயில்மாலையின்முன்
றில்கள் தோறும்
மந்தா நிலஞ்சேர் தவத்துறையில் வாழ்வே
வருக வருகவே
வான்தோய் குடுமி வரைமுளைத்த மருந்தே
வருக வருகவே. (அ)

—பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ்.

பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருகவழுதியர்கோன் புதல்வீ வருக முகிற்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப விளைவே வருக மிகுங்கருணை
அன்னே வருக அகநெகுவார்க் கனியேவருக அலர்மடவார்க்கு
அரசே வருக உரைப்பருஞ்சீர் அம்மே வருக அழற்கரத்து
மன்னோர் உடலம் பகிர்ந்தஇள மயிலேவருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (கூ)

—திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.

அறையும் நிறையும் நதியும் மதியும் அரவும் விரவு மத்தமும்
அலரும் இதழி மலரும் முடியில் அணியும் இறையிடத்துமா
மறையின் முடியும் நசையும் முனிவும் மயலும் நனிசெழித்துற
வளரும் இழிவு மலியென் உளமும் மருவி உறையும் உத்தமி
நறையும் மதுவும் உறுநன் மலரின் நனிசெய் அடியருச்சனை
நவிலும் இனிய துதியுள் உருகு நலமும் ஒருவில் பத்தியே
நிறையும் அடியர் பிறவி களைய நினைவள் தருக முத்தமே
நிலவு புரிசை சுலவும் அளகை நிமலி தருக முத்தமே. (கо)

திருவே வருக தெவிட்டாத தேனே வருக இன்னமுதத்
தெளிவே வருக பேரின்பச் செறிவே வருக ஏர்சுமந்த
உருவே வருக பரஞான ஒளியே வருக அருமறையின்
உவப்பே வருக அனைத்துயிர்க்கும் உயிரே வருக கதியளிக்கும்

தருவே வருக உலகீன்ற தாயே வருக நாயேற்குத்
தஞ்சே வருக பரனணியும் தாரே வருக கார்இவரும்
மருவேய் பொழில்சூழ் எழில்அளகை வாழ்வே வருக வருகவே
வானூர் தெய்வ மாதர்சிகா மணியே வருக வருகவே. (கக)

—அளகாபுரி உமையம்மை பிள்ளைத்தமிழ்.

வாரா திருந்தால் இனிநானுன் வடிவேல்
விழிக்கு மையெழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகம்இடேன் மணியால்
இழைத்த பணிபுனையேன்
பேராதரத்தி னொடுபழக்கம் பேசேன்
சிறிதும் முகம்பாரேன்
பிறங்கு முலைப்பால் இனிதூட்டேன் பிரியமுடனுனைக்
கலையில் வைத்துத்
தேரார் வீதி வளங்காட்டேன் செய்ய கனிவாய்
முத்தம் இடேன்
திகழும் மணித்தொட் டிலில்ஏற்றித் திருக்கண்
வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில் தவழும்
குழந்தாய் வருகவே
சாலிப் பதிவாழ் காந்திமதித் தாயே
வருக வருகவே. (கஉ)

—நெல்லைக் காந்திமதி பிள்ளைத்தமிழ்.

ஈரப் பிறைவாழ் நுதற்கனியே இனியசுவையற்
புதக் கனியே
எண்ணெண் கலையும் உடையவளே இருநால்
திசையும் உடையவளே
பாரக் கதிர்வேல் படை அனமே பதுமா சனத்தின்
புடை அனமே
பைய நடந்து வரும்பிடியே பரவார்
சுழல வரும்பிடியே
காரில் பிறழும் குழலாளே கருப்பம்
புகுந்தங் குழலாளே
கையால் தொழுவார் மருங்கணியே காத்தாண்
டருள மருங்கணியே
தாரப் பொருப்பார் விருப்பமுறும் தனத்தாய்
முத்தம் தருகவே
தமிழ்த்தென் குலசை அறம்வளர்த்த தாயே
முத்தம் தருகவே. (கந)

—அறம்வளர்த்தநாயகி பிள்ளைத்தமிழ்.

செய்யபவளச் செழுங்கொத்தே முத்தேசிவ ரத்தினமே
சிந்தாமணியே மரகதமே திகழும்வைடூ ரியமணியே
துய்யபதும ராகமே சுடர்விட் டொளிர்கோ மேதகமே
சோதிவைர மேநீலச் சுடர்விட்டெறிக்கும் இளமணியே
சைவமணியே பெண்மணியே தயங்கும்இனிய பொன்மணியே
தாயேவருக வருகஎன்றால் சதங்கைசிலம்பப் புலம்பும் என்முன்
பையநடந்து வராதபரா முகமேன் வருகவருகவே
பாகம்பிரியாள் சங்கரனார் பாகம்பிரியாள் வருகவே. (கச)

—திருமந்திரநகர் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்.

ஆறாத் துயர்கொண் டடியேன் சலிப்ப அதுசெவியில்
ஏறும லேயிருந் தாலென்செய் வேனெங்கள் ஈசற்கொரு
கூறுகி அண்ட முதலாய் இளமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே. (கரு)

—பெரியநாயகியம்மை கலித்துறை.

பொன்னே நவமணி யேயமு தேபுவி பூத்தடங்கா
மின்னே அளிவைத்த மெய்ப்பொரு ளேகப்பு வேலையென்மேல்
எந்நேரம் காலன் விடுத்தாலும் நீஇரு கையமர்த்தி
அந்நேரம் வந்தளிப் பாய்மது ராபுரி அம்பிகையே. (கசு)

—அம்பிகைமாலை.

சீரார்ரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
கார்ஆரும் மேனிக் கருங்குயிலே—ஆராயும்
வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே—சோதியே
அண்டரெல்லாம் போற்றும் அரும்பொருளே ஆரணங்கே
எண்திசைக்கும் தாயான ஈச்ஃவரியே—தெண்திரையில்
வந்தஅமு தேயென்று மாறும லேநினைப்பார்
சிந்தைதனி லேஉறையும் செல்வியே........... (கஎ)

—மீனாட்சியம்மை கலிவெண்பா.

உலையிலிடு மெழுகதுபோல் உருகிமனம் வெறுங்கூடாய்
உலர்ந்து வாடி
நிலைகுலைந்து மதிமயங்கி நின்றுமிகப் பரதவித்தல்
நீதி யோசொல்
கலைமகளே வடிவணங்கே கமலமுகத் திருமாதே
கருணை யாளே
மலைமகளே அறந்தழைக்கும் சொக்கர்பங்கில் மீனாட்சி
மதுரைத் தாயே. (கஅ)

—மீனாட்சியம்மை தோத்திரம்.

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்ருயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வே நிற்பாய். (கக)

துண்ணென் துடியொடு துஞ்சூர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய். (உ0)

—சிலப்பதிகாரம், வேட்டுவவரி: க; உக.

செய்யதிரு மேனிஒரு பாதிகரி தாகத்
　தெய்வமுதல் நாயகனை எய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காமல்
　கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்.

—கலிங்கத்துப்பரணி: கூ.

பதிஉண்டு நிதிஉண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
　　பக்கமுண் டெக்காலமும்
　பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
　　படரெனும் திமிரமணுகாக்
கதிஉண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு
　　காயசித் திகளும்உண்டு
　கறைஉண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
　　கருத்தொன் றும் உண்டாகுமேல்
நதிஉண்ட கடலெனச் சமயத்தை உண்டபர
　　ஞானஆ னந்தஒளியே
　நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
　　நானெனும் அகந்தைதீர்த்தென்
மதிஉண்ட மதியான மதிவதன வல்லியே
　　மதுசூ தனன்தங்கையே
　வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
　　வளர்கா தலிப்பெண்உமையே. (உஉ)

காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி
　　கன்மப் புனற்குளூறும்
　கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
　　காயத்துள் எனையிருத்திச்
சோற்றைச் சுமத்திநீ பந்தித்து வைக்கத்
　　துருத்திக்குள் மதுஎன்னவே
　துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன்அருள்
　　தோயநீ பாய்ச்சல்செய்து

நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட்டியும்
நமனுன தீப்பூடும் அணுகாமல் முன்நின்று
நாடுசிவ போகமான
பேற்றைப் பகுத்தருளி எனையாள வல்லையோ
பெரியஅகி லாண்டகோடி
பெற்றநா யகிபெரிய கயிலைமா நகர்மருவு
பெரியநா யகியம்மையே. (உக)

—தாயுமானசுவாமிகள் பாடல்.

கண்ணேயக் கண்ணின் மணியே மணியிற் கலந்தொளிசெய்
விண்ணே வியனொற்றி யூரண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே
மண்நேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (உச)

—திருவருட்பா.

வானுற்ற மழைமொக்குள் நிகர்செல்வம் நிலையென மகிழ்ந்துறையும்
மூடர் முன்போய்
வாய்திறந் தெண்ணுன்கு பல்லையும் காட்டியே மாரனீ
சூரன் என்றே
தானுற் றெடுத்தெடுத் தொருகோடி வாசகம் சாற்றமுக
நோக்கி டாது
சப்பாணி யோநொண்டி ஊமையோ செவிடனோ தருமந்த
காசன் இவனோ
கானுற்ற மிருகமோ உயிரிலாத் தேகமோ காணுமிது
என்கொல் என்றே
கருதிட மதத்தினுறை சிறுபேதை தங்களைக் கண்டுதுதி
செய்தி டாமல்
ஆனிற் சிறப்புற்ற தேனுவின் கன்றென்ன அமலசுக
மேவி வாழ
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின் அடிபரவும்
அடிமை என்றே. (உரு)

—காசி கேதாரகௌரி திருவருட்பா.

நீர்கொண்ட கடலாடை உலகமதில் நல்லறிஞர்
நேசிக்க உயர்கல்வியும்
நீங்காத வளமைபெறு பாங்கான செல்வமும்
நின்னடியார் பக்கலென்றும்
ஏர்கொண்ட நிறையன்பும் மேதக்க ஒண்கொடையும்
யாவரும் துதிசெய்குணமும்
எங்கும்நிறை கீர்த்தியும் மேன்மேலும் ஓங்கிட
ஈந்தருளி எனை ஆள்கவே

கார்கொண்ட விண்டலைத் தவழ்மதிக் குழவியின்
கருங்கோடு சென்றுபீறக்
கவையுலவை மஞ்சரி முகைமுறுக் கவிழ்ந்துமது
கடைமடை திறந்துபாயச்
சீர்கொண்ட செந்நெலம் மதிக்குழவி உதவியைச்
சென்றீதல் மானவளரும்
தென்புதுவை நகரிலுறை சிவகாம வல்லியே
தேசோம யானந்தியே. (உசு)

—சிவகாமியம்மை பஞ்சரத்தினம்.

இல்லாமை என்னுமொரு பொல்லாத பாவியால்
எந்நேரம் இடருறுமல்
ஏற்காமல் ஏற்பவர்க் கில்லையென் றுரையாமல்
இழிதொழில்கள் செய்திடாமல்
கல்லாத புல்லர்உற வில்லாமல் அடுபிணிக
ளுவிலும் எனைத்தொடாமல்
கற்றபெரி யோர்களொடு தர்க்கித் தெதிர்த்துக்
கடிந்தசொற் சொல்லிடாமல்
கொல்லாது கொல்லுமட மங்கையர்கள் இங்கிதக்
கொள்ளையின் மயங்கிடாமல்
குறையொன்றும் இல்லாமல் உனதடிமை செய்யவருள்
கூட்டுவாய் மதவேளைமுன்
வெல்லாமை வென்றவன் இடத்தில்வளர் அமுதமே
விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலிகற் பகவல் லியே. (உஎ)

—கற்பகவல்லியம்மை பதிகம்.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. (உஅ)

தனந்தரும் கல்வி தருமொரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தருநெஞ்சில் வஞ்சம்இல்லா
இனந்தரு நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. (உகூ)

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாயினி யாரொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. (௩௦)

—அபிராமி அந்தாதி.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி உத்தரியத்
தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த
கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும்இள நகைபோற்றி ஆரணநூ புரஞ்சிலம்பும்
அடிகள் போற்றி. (௧௧)

—திருவிளையாடற் புராணம்.

பொங்குருச் செல்வம் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருளவல்ல இணையிலா எம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கம லங்கள் போற்றி. (௧௨)

—வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம்.

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம். (௧௩)

—கந்தபுராணம்.

ஊட்லின் உடைந்த சங்கம் ஒளிர்சடைப் பிறைவெண் கீற்றின்
மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
ஏடுறு தளவப் போதின் இளநிலா முறுவல் பூத்துப்
பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கம் செய்வாம். (௧௪)

—திருச்செந்தூர்ப் புராணம்.

இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை மேருவரைக்
கிறைவி வேதச்
சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து மணக்குமொரு
செழும்பூங் கொம்பு
கமையவரைப் புரக்கஅருட் கடல்சுரந்து மடைதிறந்த
கண்ணுள் என்னும்
சமையவரைத் தலைவிகுழல் வாய்மொழியம் பிகைதிருத்தாள்
தலைமேற் கொள்வாம். (௧௫)

—திருக்குற்றாலப் புராணம்.

சமய வளர்ச்சிக்கான

கழக வெளியீடுகள்

மலர் வழிபாட்டு வரிசை

பிள்ளையார் வழிபாடு	அணா	1
முருகப்பெருமான் வழிபாடு	,,	1
சிவபெருமான் வழிபாடு	,,	1
உமையம்மை வழிபாடு	,,	1
அம்பலவாணர் வழிபாடு	,,	1
திருமால் வழிபாடு	,,	1

சமயவளர்ச்சி நூல்கள்

திருநீறும் சிவமணியும்	,,	1
திருவைந்தெழுத்து	,,	1
சிவதீக்கை	,,	1
திருவிளக்கு வழிபாடு	,,	1
திருக்கோவில் வழிபாடு	,,	1
வழிபாட்டுக்குரிய தேவாரத்திரட்டு	,,	1
வழிபாட்டுக்குரிய பிரபந்தத்திரட்டு	,,	1
பள்ளிக்கூட வழிபாடு	,,	2

வேண்டுகோள் பதிகங்கள்

(துன்பம் நீக்குவன)

1, 2, 3, 4, 5 புத்தகங்கள் தனித்தனி விலை	,,	1

[illegible] நூல்கள்

[illegible] அட்டவணை	,,	3
திருவாசகத் திருவகவல்	,,	1½
கழகச் சைவ வினாவிடை (முதற் புத்தகம்)	,,	3
சைவசமய நோன்பு விளக்கம்	,,	6

இதன் விலை அணா 1.

அப்பர் அச்சகம், சென்னை-1—C. 10200.